வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 07 | புவியியல் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) உயிரினங்கள் வாழ்வதற்குச் சாதகமான சூழல் காணப்படும் கோள்.
1) செவ்வாய் 2) புவி 3) சந்திரன் 4) வியாழன்.

02) புவி தனது அச்சில் சுற்றுவதுடன், சூரியனையும் சுற்றி வருவது.
1) புவிச்சுழற்சி 2) சமயிராக் காலம் 3) புவிச்சுற்றுகை 4) இரவு பகல்.

03) 23.5° வட அகலக் கேட்டிற்கு வழங்கப்படும் பெயர்
1) கடகக் கோடு 2) மகரக் கோடு 3) மத்திய கோடு 4) ஆட்டிக் வட்டம்.

04) 0°நெடுங்கோட்டிற்கு வழங்கப்படும் பெயர்.
1) புவிமத்திய கோடு 2) சர்வதேச திகதிக்கோடு
3) கிறின்சிச் கோடு 4) மகரக் கோடு

05) நீரினால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பு .
1) சமுத்திரம் 2) தீவு 3) காடு 4) கண்டம்.

06) இந்து சமுத்திரங்களில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்று.
1) ஜப்பான் 2) மடகஸ்கார் 3) அயர்லாந்து 4) கியூபா.

07) இலங்கையின் ஆட்புல கடல் எல்லை யாது?
1) 12 கடல் மைல் 2) 200 கடல் மைல் 3) 16 கடல் மைல் 4) 24 கடல்மைல்.

08) மத்திய மலைநாட்டில் காணக் கூடிய தரைத்தோற்ற பண்புகளில் ஒன்று.
1) எச்சக்குன்றுகள் 2) கடனீரேரிகள்
3) முனைகள் 4) மலைத்தொடர்கள்

09) கடனீரேரிகள், ஆற்று முகத்துவாரங்களில் காணப்படும் தாவர வகை
1) கண்டல் தாவரம் 2) பற்றைக் காடு
3) புல்நிலம் 4) ஓங்கி உயர்ந்த மரங்கள்

10) இலங்கைக்குரிய உலக மரபுரிமைகளில் ஒன்று.
1) சிகிரியா 2) தாஜ்மஹால் 3) சீனப்பெருஞ்சுவர் 4) சாஞ்சிக் கோபுரம்.

Education கல்வி

11) 180° நெடுங்கோட்டிற்கு வழங்கப்படும் பெயர்

1) கடகக் கோடு 2) மகரக் கோடு 3) சர்வதேச தேதிக் கோடு 4) மத்தியகோடு

12) உலகில் இரண்டாவது பெரிய சமுத்திரம்.

1) பசுபிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம்
3) அத்திலாந்திக் சமுத்திரம் 4) ஆட்டிக் சமுத்திரம்

13) இலங்கை அமைந்துள்ள கோளம்.

1) வட அரைக் கோளம் 2) தென்னரைக் கோளம்
3) முனைவு 4) மத்திய வலயம்

14) இலங்கையின் அதிகூடிய நீளம்.

1) 132Km 2) 450Km 3) 475Km 4) 520Km.

15) மத்திய மலைநாட்டில் காணப்படும் நிலவுருவங்களில் ஒன்று.

1) களப்பு 2) குடா 3) கணவாய் 4) தளத்திடைக்குன்று.

16) உயர்ந்த நிலத்தில் தட்டையாக அமைந்துள்ள பரந்த நிலப்பரப்பு.

1) மேட்டு நிலம் 2) எச்சக்குன்று 3) கணவாய் 4) பள்ளத்தாக்கு.

17) இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் ஒடுங்கிய ஆழமற்ற நீரிணை.

1) பாக்கு நீரிணை 2) மகலன் நீரிணை 3) மலாக்கா நீரிணை 4) ஜப்பான் கடல்.

18) இலங்கையில் வாழும் ஆதிவாசிகள்.

1) கலாஷ் 2) லெப்ரா 3) வேடர் 4) கிராவாறு.

19) இலங்கையில் நீர்வள நாகரிகம் ஆரம்பித்த பிரதேசம்.

1) ஈரவலயம் 2) உலர்வலயம் 3) மத்தியமாகாணம் 4) வறள்வலயம்.

20) குடாக்கள், கடனீரேரிகள், முனைகள் என்பன காணப்படும் வலயம்.

1) மத்திய மலைநாடு 2) உலர் வலயம்
3) கரையோரம் 4) ஈரவலயம்.

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

01) அ)


1) நீர் புவியியல் பாடத்தில் இரண்டாம் தவணைக்காக மேற்கொண்ட கணிப்பீட்டு வகையையும் அதன் அலகினையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

2) கணிப்பீட்டை மேற்கொள்ள ஆசிரியரால் வழங்கப்பட்ட தர உள்ளீட்டுப் பொருட்கள் எவை? (2 புள்ளி)

3) இக் கணிப்பீட்டை மேற்கொண்டதால் பெற்ற நன்மைகள் மூன்று தருக? (2 புள்ளி)

ஆ) தரப்பட்ட உலகப்படத்தில் A,B,C,D,E,F என குறிப்பிடப்பட்டுள்ளவற்றை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டவற்றிலிருந்து இனங்கண்டு ஒழுங்கு முறையாக உமது விடைத்தாளில் எழுதுக.

(மாலைதீவு, அவுஸ்ரேலியா, கடகக் கோடு, அத்திலாந்திக் சமுத்திரம், கிறின்விச் கோடு, பாக்கு நீரிணை)



02)

1) புவிச்சுழற்சி என்றால் என்ன? (2 புள்ளி)

2) புவி முழுமையாக கோள வடிவமானது அல்ல என்பதற்கான ஆதாரங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

3) நெடுங்கோடு வரையப்படும் முனையைத் தருக? (3 புள்ளி)

4) பிரதான அகலக் கோடுகளைப் பெயரிடுக? (4 புள்ளி)

03)

1) உலகின் பிரதான சமுத்திரங்கள் மூன்றினைப் பெயரிடுக? (3 புள்ளி)

2) இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள் மூன்று தருக? (3 புள்ளி)

3) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றும் எவை? (3 புள்ளி)

4) இலங்கையின் தனி அமைவிடத்தை குறிப்பிடுக? (3 புள்ளி)

04)

1) இலங்கையின் பிரதான தரைத்தோற்ற பிரிவுகள் மூன்று தருக? (3 புள்ளி)

2) மத்திய மலைநாட்டில் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்கள் மூன்று குறிப்பிடுக? (3 புள்ளி)

3) இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் மூன்று முறைகளும் எவை? (3 புள்ளி)

4) தென்மேற் பருவ காற்று மூலம் மழை கிடைக்கும் மாதங்களையும், பிரதேசங்களையும் குறிப்பிடுக? (3 புள்ளி)

05)

1) தென்னாசிய வலயநாடுகள் மூன்றினைப் பெயரிடுக? (3 புள்ளி)

2) அபிவிருத்தியை அளவிடப் பயன்படும் குறிகாட்டிகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளி)

3) மருத்துவ சுகாதாரத்துறை வசதிகள் மேம்பாடடைதல் காரணமாக ஏற்படும் விளைவுகள் மூன்று தருக? (3 புள்ளி)

4) எழுத்தறிவு உயர்மட்டத்தில் காணப்படும் நாடு ஒன்று பெறக் கூடிய நன்மைகள் மூன்று தருக? (3 புள்ளி)

06)

1) இலங்கையில் ஈர வலயத்தில் உள்ளடங்கும் பிரதான மாவட்டங்கள் மூன்று குறிப்பிடுக? (3 புள்ளி)

2) யாழ்ப்பாணக் குடாநாட்டை சூழ உள்ள தீவுகள் மூன்று குறிப்பிடுக? (3 புள்ளி)

3) யாழ்ப்பாண பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா பிரதேசங்கள் மூன்று தருக? (3 புள்ளி)

4) உலர் வலய பிரதேசத்தில் காணப்படும் எச்சக் குன்றுகள் மூன்று குறிப்பிடுக? (3 புள்ளி)

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**